# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | | |
|---|---|---|
| **Calendar** | : | **Case No.61/2016** |
| **Miscellaneous** | : | |
| **Summary Trial** | : | |
| **Maintenance** | : | |
| **Deposition of witness for prosecution** | : | **P.W.1.பாண்டிலிங்கம்** |
| **Father's Name** | : | **சின்னமாயத்தேவர்** |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **20.09.2021**

மு.வி:

நான் கல்லூத்துபெருமாள்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது உசிலம்பட்டி அரசு பேருந்து பணிமனையில் ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் 1வது எதிரியை எனக்கு தெரியும். 11.04.2016 ஆம் தேதி நான் கம்பத்திலிருந்து காலை 10.56 மணிக்கு பதிவு எண்.டி.எண்.58 என்.2305 பேருந்தை எடுத்து மதுரையை நோக்கி சென்று கொண்டிருந்தபோது செல்லம்பட்டி அருகே சென்றபோது சுமார் 1 முதல் 1.15 மணிக்கு செல்லம்பட்டி பஸ் ஸ்டாப்பில் ஆட்களை இறக்கி ஏற்றிக்கொண்டு பேருந்தை இயக்க முற்பட்டபோது ஆஜர் எதிரி உட்பட 4, 5 பேர்கள் மதுபோதையில் பேருந்தின் முன்னால் தகராறு செய்தார்கள். ஏன் வண்டியின் முன்னால் நின்று இவ்வாறு செய்கிறீர்கள் என்று நான் கேட்டதற்கு நிப்பாட்டுடா வண்டியை என்று கத்தி எதிரி என்னுடைய சட்டையை பிடித்து பேருந்திலிருந்து என்னை கீழே இறக்கி கைகளால் அடித்து ஊமைக்காயங்கள் ஏற்படுத்தினார். பேருந்தில் இருந்த மற்ற பயணிகள் மற்றும் பேருந்தின் நடத்துனர் ஆகியோர்கள் சண்டையை விலக்கிவிட்டார்கள். உடனே எதிரி அதை பொருட்படுத்தாமல் என்னை செருப்பால் அடித்தார். பிறகு இரண்டு மணி நேரம் பேருந்தை அந்த இடத்திலேயே நிறுத்தி பெரிய பிரச்சினை ஆனது. பிறகு உசிலம்பட்டி காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் செக்கானூரணி ஆய்வாளர் ஆகியோர்கள் வந்து பேச்சு வார்த்தை நடத்தினார்கள். பிறகு நான் செக்கானூரணி காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்துவிட்டு உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன். அங்கு இரண்டு

நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் தான் புகார் மனுவை எழுதி கொடுத்தேன். புகார் மனு **அ.சா.ஆ.1.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(மேற்படி சாட்சியத்தின்படி 1வது எதிரி மீது இதச பிரிவு 332ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட வேண்டியுள்ளது. எனவே மேற்படி குற்றச்சாட்டு வனைதலுக்காக வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)